DR. H. V. HANDE ; Mr. Deputy Speaker, Sir, I do hereby give notice of the following adjournment motion;

"I wish to move for an adjournment of the business of the Assembly for discussing a definite matter of urgent public importance, namely, the rehabilitation and relief measures to be taken in respect of nearly 2,000 persons rendered homeless in a blaze of fire which destroyed nearly 135 huts in Teynampet and 50 huts in Royapuram on Saturday, the 1st July 1967".

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை அன்றாட சர்க்கார் அலுவலைச் சேர்ந்தது. மேலும், இந்தப் பிரச்சினையில் மாநகராட்சி தக்க நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். ஆகவே, இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்து, அவையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டியதில்லை என்று நான் கருதுகிறேன் ஆகவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு துணைப் பேரவைத்தலைவர் : இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கும் தீ விபத்துக்களுக்காக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது சர்க்காரின் அன்றாட அலுவல்களில் ஒன்றாகும். ஆகவே இப்பொழுது இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்துப் பேசவேண்டும் என்பது அவசியம் இல்லை. மேலும் இது பற்றி, நிதி ஒதுக்கு மசோதா வரும்போது பேச வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்தத் தீர்மானத்தை நான் நிராகரிக்கிறேன்.

3. அறிவிப்பு

மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு (Senate) தேர்தல்.

மாண்புமிகு துணைத் பேரவைத் தலைவர் : மதுரைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் (Senate) இப்பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) திரு. சா. கணேசன், (2) திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு, (3) திரு. கே. டி. கோசல்ராம், ஆகிய மூவரும் இப்பேரவைக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்படாத காரணத்தால், பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழுவில், 1—6—1967-லிருந்து நிரப்பப்பட வேண்டிய மூன்று இடங்களுக்கு, தமிழக சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு மதுரைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் விதிமுறைப்படி, பகுதிவாரி அடிப்படையில் (Proportional Representation) இத்தேர்வு நடைபெறுவது இல்லை. எனவே, வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களை 6—7—1967 வியாழக்கிழமை மாலை 3-மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 7—7—1967, வெள்ளிக்கிழமை, காலை 11-மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 8—7—1967 சனிக்கிழமை பிற்பகல் 2-மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது மூன்று இடங்களுக்கு, மேற்படுமாயின் 11—7—1967 செவ்வாய்க் கிழமை காலை [illegible]க்கும் பிற்பகல் 1-மணிக்கும் இடையே சென்னை, கோட்டையில் இருக்கும் உறுப்பினர் ஓய்வு அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.